




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (1.6.2025) மதுரை, கலைஞர் திடலில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, கழக முதன்மை செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள் –ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. இராசா, அந்தியூர் செல்வராஜ், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள்: திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

*திருச்சி, ஜூன் 3 -*

திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய 102வது பிறந்த நாளை முன்னிட்டு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) மதியம் 2 மணிக்கு திருச்சி டி.வி.எஸ். டோல் கேட் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையில் கழக நிர்வாகிகளுடன் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.



முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (03.06.2025- செவ்வாய்க்கிழமை) காலை பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகங்களில் கழக இருவண்ண கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை செய்திட கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு கிளைக் கழகச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

### சென்னை திரும்பும் பயணிகளுக்கு அதிர்ச்சி:

# உள்நாட்டு விமான கட்டணங்கள் பல மடங்கு உயர்வு!

*சென்னை, ஜூன் 3 -*

மதுரை, தூத்துக்குடி, திருச்சி, கோவையிலிருந்து சென்னைக்கு வருவதற்கு விமான கட்டணங்கள் பல மடங்கு உயர்ந்துள்ளது.

வெளியூர் சென்றவர்கள் விமானங்களில் திரும்புவதால் உள்நாட்டு சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

மதுரை சென்னைக்கு சாதாரண நாட்களில் விமான கட்டணம் ரூ.4,542. இன்று கட்டணம் ரூ.18,127ஆக உயர்ந்துள்ளது.

தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு விமான கட்டணம் ரூ.4.214ஆக இருந்த நிலையில் ரூ.17,401 ஆக உயர்ந்துள்ளது. திருச்சி சென்னை இடையே சாதாரண நாட்களில் கட்டணம் ரூ.2,334. இன்றைய தினம் கட்டணம் ரூ.9,164 ஆக உயர்ந்து காணப்படுகிறது.

இதனால், விமானப் பயணிகள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். பல மடங்கு அதிக விமான கட்டணம் கொடுத்து சொந்த ஊர்களில் இருந்தும் சுற்றுலா தலங்களில் இருந்தும் பயணிகள் பயணித்து வருகின்றனர்.




